**கிராமின் கிருஷி மவுசம் சேவா**
இந்திய வானிலை துறை
தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம்
கோவை, தமிழ்நாடு

# அக்ரோமெட் ஆலோசனை புல்லட்டின்

**தேதி : 06-10-2023**

**திருவள்ளூர்(தமிழ்நாடு) வானிலை முன்னறிவிப்பு - அன்று வெளியிடப்பட்ட :2023-10-06 ( அடுத்த 5 நாட்களில் 8:30 IST வரை செல்லுபடியாகும்)**

| வானிலை காரணி | 2023-10-07 | 2023-10-08 | 2023-10-09 | 2023-10-10 | 2023-10-11 |
|---|---|---|---|---|---|
| மழையளவு (மி.மீ ) | 10.0 | 10.0 | 10.0 | 5.0 | 5.0 |
| அதிக பட்ச வெப்பநிலை ( oசெ ) | 36.0 | 36.0 | 36.0 | 35.0 | 35.0 |
| குறைந்த பட்ச வெப்பநிலை (o செ ) | 26.0 | 26.0 | 26.0 | 25.0 | 25.0 |
| அதிக பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 85 | 85 | 85 | 80 | 80 |
| குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 75 | 75 | 75 | 70 | 70 |
| காற்றின் வேகம் (கி.மீ./மணி ) | 6 | 6 | 6 | 4 | 4 |
| காற்றின் திசை (கோணம்) | 140 | 140 | 140 | 180 | 180 |
| மேக மூட்டம் (ஆக்டா) | 8 | 8 | 7 | 6 | 6 |

## வானிலை சுருக்கம் / எச்சரிக்கை:

வரும் ஐந்து லேசான முதல் மிதமான மழை பெய்யக்கூடும்; அடுத்த ஐந்து நாட்களுக்கு அதிகபட்ச வெப்பநிலை 35.0°C-36.0.0°C ஆகவும் மற்றும் குறைந்தபட்ச வெப்பநிலை 25.0°C-26.0°C ஆகவும் இருக்கலாம்; காற்றின் ஈரப்பதம் 70-85% வரை எதிர்பார்க்கப்படுகிறது; காற்றின் வேகம் மணிக்கு 4.0-6.0 கி.மீ வரை இருக்கலாம்; காற்றின் திசை தென்கிழக்கு முதல் தெற்கிலிருந்து வீசக்கூடும்.

## பொது ஆலோசனை:

11.10.2023 முதல் 17.10.2023 வரை தமிழ்நாட்டில் மழைப்பொழிவு, குறைந்தபட்ச வெப்பநிலை மற்றும் அதிகபட்ச வெப்பநிலை இயல்பு நிலையில் பதிவாகக்கூடும்.

## குறுஞ்செய்தி :

1.பயிர்களுக்கு பூச்சிக்கொல்லி தெளிக்கும் போது ஒட்டும் திரவம் கலந்து தெளிக்கவும். 2. பயிர் வயலில் மழை நீர் தேங்காதவாறு வெளியேறும் வகையில் முறையான வடிகால் அமைக்கவும்.

## பயிர் குறிப்பிட்ட ஆலோசனை:

| பயிர் | பயிர் குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| நெல் | தற்பொழுது நிலவும் வானிலை காரணமாக நெற்பயிரில் பின்வரும் பூச்சிகள் மற்றும் நோய் தாக்கம் காணப்படலாம்; 1.இலைப்பேன்- நாற்றங்கால் (20 சென்ட்) தியாமெதோக்ஸாம் 25% WG 4 கிராம் என்ற வீதம் 40 லிட்டர் தண்ணிரில் கலந்து தெளிக்கவும்; 2. தண்டுத்துளைப்பான்- ஏக்கருக்கு அசாடிராக்ட்டின் 0.03% 400 மில்லி லிட்டர் வீதம் அல்லது ஏக்கருக்கு ப்ளூபெண்டியாமைடு 20% WP 50 கிராம் என்ற வீதம் 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கவும் 3.இலை சுருட்டுப்புழு- ஏக்கருக்கு அசிபேட் 400 மில்லி லிட்டர் வீதம் அல்லது ஏக்கருக்கு அசாடிராக்ட்டின் 0.03% 400 மில்லி லிட்டர் என்ற வீதம் 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கவும்; 4. குலை நோய்- ஏக்கருக்கு ப்ராபிகோனசோல் 75 WP @ 200 மில்லி லிட்டர் வீதம் 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கவும் அல்லது ட்ரைசைக்ளோசோல் 2 கிராம் / லிட்டர் தண்ணீருடன் கலந்து தெளிக்கவும்; 5. இலைக் கருகல் நோய்- நடவுக்கு பிறகு 30 மற்றும் 45 நாட்களுக்குள் ஏக்கருக்கு இரண்டு முறை காப்பர் ஹைட்ராக்ஸிட் 77 WP 500 கிராம் 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கலாம். |

## தோட்டக்கலை குறிப்பிட்ட ஆலோசனை:

| தோட்டக்கலை | தோட்டக்கலை குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| கத்திரிக்காய் | தற்போது நிலவும் வானிலை காரணமாக கத்தரியில் சிற்றிலை அல்லது சிறு இலை நோய் தாக்கம் ஏற்படலாம், கட்டுப்படுத்த டைமெத்தோயேட் 30 EC ஒரு லிட்டர் தண்ணீருக்கு 1 மில்லி லிட்டர் என்ற வீதம் தண்ணீரில் கலந்து தெளிக்கலாம். மேலும் நோய் தாக்கப்பட்ட இலையினை அகற்றி விடலாம். |
| பாகற்காய் | தற்போது நிலவும் வானிலை காரணமாக பாகற்காயில் பழ ஈ தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது. இதனை கட்டுப்படுத்த நச்சு உணவு/பொறி மெத்தைல் யூஜினால் + மாலத்தியான் 50 EC இரண்டையும் சம அளவு கலந்து (1:1) ஒவ்வொரு பாலித்தீன் பைகளில் 10 மில்லி லிட்டர் அளவுக்கு எடுத்து நச்சுப்பொறியாக ஏக்கருக்கு 10 வீதம் வைக்கலாம். |
| மாம்பழம் | தற்போது நிலவும் வானிலை காரணமாக மாமரங்களில் பழ ஈ தாக்கம் ஏற்படலாம், கட்டுப்படுத்த ஒரு லிட்டர் தண்ணீருக்கு மாலத்தியான் 2 மில்லி லிட்டர் வீதம் மற்றும் மெத்தில் யூஜெனோல் 1% கரைசலுடன் கலந்து 10 மில்லி லிட்டர் என்ற வீதம் பொறியினை தயார் செய்து ஏக்கருக்கு 10 வீதம் வைக்கலாம். |